செய்தி வெளியீடு எண் : 947 நாள் : 17.05.2023

# <u>செய்தி வெளியீடு</u>

## எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் வெற்றி பெற்றிட திருமதி என். முத்தமிழ்ச்செல்வி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து.

எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் 7200 மீட்டர் உயரத்தை கடந்து வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை திருமதி என். முத்தமிழ்ச்செல்வி அவர்களின் பிறந்தநாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அவரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

மேலும், எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் மீதமுள்ள தூரத்தையும் வெற்றிகரமாக கடந்து, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த தமிழ்நாட்டின் முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்றிட தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதுடன், எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தை வெற்றிகரமாக முடித்து தன்னை நேரில் சந்திக்க வருமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in